1 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE

நாம் நாடு

தமிழ் தினசரி ஆசிரியர் இராஜகுஞ்சேமன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 20உ திங்கள் (2—4—56) ★ ★ வெளியூர்: பங்குனி 21உ செவ்வாய் (3—4—56) [இத

சமூக நலத் திட்டப் பகுதி
மதுபானக் கடைகள்

"ஒரு சமூக நலத் திட்டம் துவக்கப்படுகிறபோது கூடவே ஒரு மதுபானக் கடையும் துவங்கிவிடுகி என்று, மத்திய திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா மக்க கூட்டத்தில் மன வேதனையுடன் கூறியிருக்கிறார்.

இதுகுறித்து மேலும் அவர் பேசுகையில், 'இதை க னடியாகத் தவிர்த்தாக வேண்டும். இப்படிப்பட்ட மது சடைகள் பல திட்டப் பகுதிகளிலும் துவக்கப்பட்டதினா மோசமான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன' என்றும் குறி டிருக்கிறார்.

இந்தியப் பேரரசிடம் மிதமிஞ்சிய அதிகா குவிந்திருக்கிறது

காமதந்திரமைகுறைவு-பண விரயம் ஆகியன் துன்றுந்தான் விளைவாகிறது

அவைகளைத் தவிர்க்க அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும்

டெல்லியிடம் என்பதல்ல— மக்கள் மிகுதிதான் பிரச்சினை!

கடன்பட்டோர்பில் மாகாணங்கள்-கடன் கொடுப்போர் பில் இந்திய அரசாங்கம்!

பண உதவி பெற இயல அரசின் கையில் மாகாணங்கள் கைகட்டி நிற்பம் பரிதாபம்!

மண்டலக் குழுவிற்கும் அதிகம் வேண்டும்

பிற கன்னடமக்களைச் சேர்த்துக் கொள்ள மறுப்பது ஒருமைப்பாட்டின் குறுகிய புத்திக்கு எடுத்துக்காட்டாகிவிடும்

பிறபகுதியிலுள்ள கன்னட மக்கள் கோரிக்கை: தீர்மானத்தைக் குழுவேண்டும்

மைசூர் சட்டசபையில் முதலமைச்சர் அனுமந்தையா

"இங்குப் பேரரசிடம் மிதமிஞ்சிய அதிகாரம் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது. இன் பலனாகக் கால தாமதம் ஏடுகிறது, அதுவுமன்றி சில இனங்களில் திறமைக் குறைவும், வீண் பண விரையமும் ஏற்பட்டுவருகின்றன."

"இந்தியாவுக்கு அதிகமாகச் சுற்றிருப்பது என்ப தல்ல கருதப்பட வேண்டியது; ஆனால், மக்களின் மகிழ்வு தான் பொருட்படுத்தப்பட வேண்டியதாகும்."

"தங்களுடைய பணத் தேவைக்காக மாகாண அரசு கள், இந்திய அரசிடமே தொடர்ந்து கையேந்தி நிற்க வேண்டி இருக்கின்றன. அவ்வாறு தொடர்ந்து நிற்கும் நிலை, கடன் காரன் ஒருவன் கடன் கொடுத்தவரின் தலைவாயிலில் துவண்டுக் காத்துக்கிடப்பதுபோல் இருக்கிறது"

என்று, மாகாணப் புனரமைப்பு [illegible] சோதாவே மைசூர் சட்டசபைமுன் வைத்துப் பேசும்பொழுது மு[illegible] லமைச்சர் அனுமந்தையா குறிப்பிட் டார். அதற்கு விமோசனம் [illegible] கூறும் வகையில் அவர் குறிப்பிட் டுள்ளதாவது :—

"மண்டலக் குழுவிடம் [illegible] ண்மையான அதிகாரம் ஒப்படைக் கப்பட வேண்டும். ஒவ்வொரு [illegible] மாநிலத்திலும் கிளைகளை வைத் துக்கொண்டு தொழில்பட்டுவரு [illegible] மத்திய மராமத்துத் துறை கலைக் கப்பட்டு, அது மேற்கொண்டுவ [illegible] தப் பணிகள் மாகாண மராமத்துத் துறையுடனே இணைக்கப்பட [illegible] விட வேண்டும். அதைக் கண் காணித்துவரும் பொறுப்பை [illegible] ண்டலக் குழுவுக்கு ஒதுக்க வேண் டும். இதுபோன்றே, [illegible] துறையிலும் அதிகாரத்தைப் பரவலாக்கும் முறையைப் புகுத்தினால், செயல் முறையில் ஏற்படும் சங்கடங்களைத் தவிர்ப்பது எளிதாகும். எனவே, மண்டலக் குழு செவ்வனே செயல்படுவதற்கு [illegible] கூடுதலான அதிகாரம் அதனிடம் தரப்பட வேண்டியது கட்டாயமாகும்."

அதிகாரத்தைப் பரவலாக்க [illegible] வேண்டும் என விளக்கிக்கூறிய துடன், எல்லைக் குழுவை கியமைக்க வேண்டியதற்கான காரணத்தை யும் எடுத்துக்காட்டினார். அது வருமாறு :—

(4-ம் பக்கம் பார்க்க)

என்ன காரணமோ?

2-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் பிலாய், துர்காபூர், ரூர்கேலா ஆகிய இடங்களில் துவக்கப்படவிருக்கும் உருக்கு ஆலைகள் வெகு தாமதமுடன் உற் பத்தியில் ஈடுபடுமென நம்புவ தாக மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தெரிவித் துள்ளார்.

அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் வேறு எந்த உருக்கு ஆலைத்திட்ட மும் மேற்கொள்ளப்படாதென அவர் கூறியுள்ளார்.

இந்தியாவில் 1954-ம் ஆண்டில் 30 ஆராய்ச்சிக் கூடங்களில் 1 10,000 மனைக்குக் மேற்பட்டுள்ள செய்தரப்படுத்தப்பட்டது. [illegible]

வெந்தப் புண்ணில் வேல்! நொந்த உள்ளத்தில் சுடுசொ

நிவாரணம் கோரும் மக்க நையாண்டியா?

புயல்—புனல் கொடுமையையும் தாங்கிக்கொள்ள அமைச்சரின் ஆணவ மொழி எவ்வாறு தா

சென்னை, மார்ச் 31—

தஞ்சை மாவட்டம் மன்னார்குடி வட்டத்தில் புயலால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் வீடு ஊப் புதுப் பிக்கச் கடன் கோரி சர்காருக்கு 6471 மனுக்கள் வந்தாயும், அவற் றில் 51 மனுக்களை அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும் சென்னை சட்ட சபையில் 'ரெவினியூ' அமைச்சர் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கே: 6,000-த்திற்கு மேற்பட்ட மனுக்களில், 51-தான் அனுமதி செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் கூறியதிலிருந்து, புயல் வேகமாக அடித்தபோதிலும் ஆகாரவற்ற மக் களுக்கு நிவாரணமளிப்பதில் ஆளும் கட்சி வேகத்தில்தான் சர்க்கார் செல்கிறது என்று வருவதாகத் தெரிகிறது. கடன் மனுக்களை தீர்க்க அதிக துரிதம் சர்க்கார் கையிக் கொள்ளுகிறார்?

ப: புயலால் [illegible] தாரிதமாக பண உ[illegible] பட்டது. 6,25,530 [illegible] போட்டுக்கொள்ள [illegible] செய்யப்பட்டது வந்து [illegible] மனுக்களும் வீடுகளைப் பு [illegible] துக்கொள்வதற்காகத்தான் [illegible] தானமாகக் கவனிக்கலாம். [illegible] னர் பணம் தருகிறார்களே, [illegible] துக்கொள்ளலாமே' என்ற [illegible] மனுச் செய்துள்ளனர். இதில் [illegible] சரப்பட்டு சர்க்கார் பணத்தை [illegible] இறைத்தவிட முடியாது.

கே: அடுத்த புயல் வரு [illegible] குன்னாகவாவது, சென்ற [illegible] சம்பந்தமான நிவாரண வே [illegible] சர்க்கார் முடித்தவிடுவார [illegible]

ப: அடுத்த புயல் வீ [illegible] மென்று உறுப்பினர் கே [illegible] வருந்துகிறேன்; அதை [illegible] மறந்தவிடவேண்டும்.

கோவா அர்த்தாலை ஒப்பினதேவ் கூட்டணி அர்த்தாலைக் காய்வதேய்

சட்டசபை கருத்துக்கு மதிப்பளிக்க மத்திய அரசாங்கம் மறுப்பது நியாயம

எல்லை சிக்கல் வாக்கெடுப்பின் மூலம் தீர்க்கப்படுவதல்லவா மக்களாட்சி முறை?

தமிழ்மக்களால் புனிதமாகக் கருதப்பட்டுவரும் தமிழ்நாடு என்ற பெயர் ஏற்கப்படாதது அநீதி

அதிகாரப்பற்றற்ற சட்டசபை உறுப்பினர்கள் இடம் பெறுத மண்டலக் குழுவை வரவேற்கக்கூடாது

சட்டசபையில் பி.டி.இராசன் முழக்கம்

சென்னை, மார்ச் 31—

"மாநிலப் புனரமைப்புக் குழு அறிக்கை குறித்து இந்தச் சட்டசபை விவாதித்துத் தனது கருத்தை அறிவித்திருந்தும் கூட, அக்கருத்திற்கு மத்திய சர்க்கார் மதிப்பளித்ததாகவே தெரியவில்லை.

"சபையில் கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கப்படும் என்று நான் நம்புகிறேன். மாநிலப் புனரமைப்புக் குழுவின் அறிக்கை மீது நமக்குள்ள நம்பிக்கையையும், ஆவலையும் எந்த ஒரு மாநிலமும் எண்ணிப் பார்த்தது கிடையாது என்பதே என்னுடைய கருத்து. இந்தியாவில் பல இடங்களிலும் அர்த்தால்கள் நடைபெற்றன. ஆனால் சென்னையில் நடைபெற்ற அர்த்தால் அமைதியாகவே நடைபெற்றது. அர்த்தால் நடத்துவதென்பது, ஒருவன் தனது எதிர்ப்பை நல்ல முறையில் எடுத்துக்காட்ட மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையே. கோவாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எதிர்த்து நடைபெற்ற அர்த்தால் மட்டும் ஆதரித்துவிட்டு,

(4-ம் பக்கம் பார்க்க)

'போரை' நிறு பேச்சு வார்த்

கம். தலைவர் கழ [illegible]

சிங்கப்பூர், மலையாளில் ஸடை [illegible] ற கலகங்களை நி [illegible] வதற்காக, மலாயா [illegible] தென்கு அ [illegible] பேச்சுவார்த் [illegible] தயாராக [illegible] கம்யூனிஸ் [illegible] பெக், [illegible] கடிதம் [illegible] கிறார்.

நம் நாடு
[illegible] இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
2—4—'56 திங்கள்

[illegible]வற்றப் பெருவழக்கு!

[illegible] செய்வித்தால்தான் [illegible] பயிற்சியம்பெறும்; [illegible] திறந்தால்தான் [illegible] மணம் முடிக்கப் [illegible] பெறுவது சாத்திய [illegible] கல்லாதவர் ஆகிய [illegible] இப்பழமொ[illegible] சாதாரண [illegible] வருகிறுர்கள். [illegible] இப்பழமொழி [illegible]

யாக, இமைமூடித் திறக்கு முன், குறைந்த செலவில் மின்சார உற்பத்தியைக் கூட்டுவதற்கு, மேலும் விடுபட்டுக் கிடக்கும் தொழில் [illegible] ஜீவாதிகளைக் காட்டினுல், மின்சார உற்பத்தியை [illegible] மடங்கு வேண்டுமானுலும் அதிகரிக்க முயற்சிக்கிறோம் என்று, நம்மை வினவுவதின் மூலமே, நமது கோரிக்கைகளை முடக்கி விடுகிறுர்கள்.

ஜீவாதிகள் இல்லை என்ருல் என்ன, எரிமின்சார உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்பாடு செய்யக்கூடாதா எனத் தொடர்ந்து [illegible] தேவைப்படும் [illegible] இப்பகுதியில் [illegible] வடநாட்டில் [illegible] செலவு [illegible] உற்பத்தியின் செல[illegible] முறை [illegible]

திராவிடத்தில் [illegible] இலக்கரி [illegible] ஆராய்ந் [illegible] தாண்டி [illegible] அதைக் [illegible] உற் [illegible] [illegible] மாணிக் [illegible] இப்பகுதி [illegible] இந்திய [illegible] தானே! [illegible] தொழில்கள் [illegible] இப்பகுதி [illegible]

[illegible]

'வாய்க்கால் வெட்டுவதை துரிதமாக்க விதிகள் தளர்த்தப்பட்டன'

'விளைவு பண ஊழலில் முடிந்தது— அதிகாரிகள் எதேச்சாதிகாரிகளாயினர்'

பக்ரா—நங்கல் ஊழலை விசாரித்தறிந்த குழு குற்றச்சாட்டு

"பக்ரா வாய்க்கால் வெட்டுவதைத் துரிதப்படுத்துவதற்காக, நிர்ணயிக்கப்பட்டிருந்த விதிகளில் சிலவற்றை, பக்ரா நிர்வாகக் குழு தளர்த்தியது. அதனுல், மேற்கொள்ள வேண்டிய பணிகளைப் பிரித்து அளிப்பவர்களிடமிருந்து, ஒப்பந்தப் புள்ளிகளை முன்னதாகக் கோரப்படும் முறை ஒழிக்கப்பட்டுவிட்டதுடன், பொறியியல் அதிகாரிகளின் அதிகாரத்தையும் கூட்டிவிட்டது.

அத்தகு விதி தளர்த்தல் ஒழுங்கீனத்திற்கும் தவருன முறைகளைக் கையாளுவதற்கும் இடமளித்துவிட்டது.

சேர வேண்டியதற்குக் கூடுதலாகப் பணம் தருதல், உரித்தான அதிகார எல்லையைக் கடத்தல், நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளை அலட்சியப்படுத்தல் போன்ற முறையற்ற போக்குகளைச் செயலாற்றவும்கூட, பொறியியல் அதிகாரிகளுக்கு வாய்ப்பளித்துவிட்டது"

என்ற உண்மையை, பக்ரா வாய்க்கால் திட்டத்தில் ஏற்பட்ட ஊழலை, தொடர்புடைய பொறியியல் அதிகாரிகளை, வாய்மூலமாகக் கேட்டறிந்து, பஞ்சாப் அரசாங்கத்தின் பொதுக்கணக்குக் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஆதியோடு அந்தமாக அறிந்திருக்கிறுர் அக்கலையை, அது போதாதா? அவரை உலகம் புகழ்வதைப் பார்! அவரை, அமெரிக்கா அணைத்துக்கொள்வதையும், பொதுவுடைமை ரஷ்யா புகழ்ந்தோதுவதையும், நவசீனம் நல்லுரையால் வரவேற்பதையும், பார்—கருத்தைச் செலுத்திப் பார்! அதைக் கண்டு பூரிப்பதை விடுத்து, அவர் புகழ்பாடிக் கிடப்பதை விடுத்து, அவரை ஏற்றுத் தொழுவதை விடுத்து, ஏன் அங்கே மட்டும் தொழில்கள் குவிக்கப்படுகின்றன? இங்கே அவைகள் குறைந்த அளவிலும் இடம் பெருதது ஏன்? என்றெல்லாம் இனி பேசாதா! பேசினுல் பலடயுண்டு, சுட்டு வீழ்த்திட விதவிதமான குண்டுகள் உண்டு; தள்ளிப் பூட்டிட ஏராளமான சிறைகள் உண்டு! எச்சரிக்கை! எச்சரிக்கை!' என்றும்,

'கனரகத் தொழில்களால் வேலை[illegible]ல்லாத் திண்டாட்டம் தொலையுமா? ஒருக்காலும் தொலையாதே! வேலையில்லாக் கொடுமையைப் [illegible]போக்குவது குடிசைத் தொழில்க[illegible] அல்லவா? நமது மூதா[illegible]தகள் அவைகளைக் கொண்டுதா[illegible]னே சிறந்து உயர்ந்து விளங்கின[illegible]!' என்றும்,

'ஆலையில் தீட்டப்படும் அரிசியில் சத்தேது? சாரமேது! கைக்குத்தல் அரிசியில் ஜீவ சத்துண்டு! அதை உருவாக்கி அம்பாரம் அம்பாரமாகக் குவிக்க உரலும் உலக்கையும் நிரம்ப உண்டு!' என்றும்,

'கனரகத் தொழில்களுக்கோ வெளிநாட்டிலிருந்து கேட்கும் விலையைக் கொடுத்து இயந்திரங்களை வாங்கியாக வேண்டிய தொல்லை உண்டு! நமது குடிசைத் தொழில்களுக்கு அந்தத் தொல்லை கிடையாது—அறவே கிடையாது!' என்றும்,

'இலட்சம் இலட்சமாக உரல்களை உருவாக்கிக் குவிக்க நமது மலைக்குன்றுகளில் கடினமான கற்பாறைகள் நிரம்ப உண்டு! உலக்கைகள் போதியமட்டும் தயாரித்துக்கொள்ள உறுதியான உயர்ந்த மரங்கள் நமது காட்டகத்தே உள்ளன! அம்பர் சர்க்கா இருக்க, ஆலை நூல் நமக்கு எதற்கு? கதிமோட்சமளிக்கக் கதர் இருக்கிறது! கைத்தறி இருக்கிறது! கவலையை விடு! குரோத புத்தியை [illegible]

பக்ரா நங்கல் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள ஊழல்களையும், மோசடிகளையும் ஆராய்ந்து அறிவிக்கும் பொறுப்பேற்ற பஞ்சாப் அரசாங்கப் பொதுக் கணக்குக் குழு அறிக்கையை, அரசாங்கத்தின் 1953-ம் ஆண்டின் தணிக்கைக் குழு அறிக்கையுடன், சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

பொதுக் கணக்குக் குழு தனது அறிக்கையில், பொதுமக்களின் பிரதிநிதிகளையும், கொண்ட ஒரு உயர் அதிகாரக் குழுவை, பக்ரா நங்கல் குழுவிற்குக் கட்டுப்படாத வகையில், மேற்படி திட்டத்தைக் கண்காணிக்கக் கூடியவிரைவில் நியமிக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்திருக்கிறது.

[illegible] கால மரணங்[illegible]

[illegible]ாலும் மாரடைப்பால் [illegible]மரம்!

டோக்கியோ, [illegible] — எதிர்காலத்தில் சீர்[illegible] [illegible]ப்படும் மரணச் சம்பவங்[illegible] [illegible]ாலும் மாரடைப்பா[illegible] [illegible]குமென பிரபல [illegible] நிபுணர் டாக்டர் [illegible] [illegible]ன்பார் கூறியுள்ளா[illegible] [illegible] நீரிழிவு, [illegible] நோய், கூடிய[illegible] வாயு போன்ற வியாதி[illegible] [illegible]டுத்த மருந்துகள் [illegible] [illegible]பட்டுள்ளன; ஆனுல் [illegible] [illegible] மருந்து [illegible] அமெரிக்காவில் ம[illegible] [illegible]பவர்களில், 52 சத[illegible] [illegible]வீதத்தினர் இந்நோய்க்குத்தான் [illegible]யுள்ளனர். ஆடம்பர[illegible] [illegible] வகைகளை உட்கொள்[illegible] [illegible] உடற் பயிற்சிக் குறைவும் [illegible] மாரடைப்புக்குக் காரணம்!" [illegible] அவர் தெரிவித்துள்[illegible]

இ[illegible]னில் இந்திய வியாபாரி கைது

[illegible]வைரத்தையும் மரகதத்தையும் [illegible] முயன்ருர்

[illegible], மார்ச் 30— [illegible] வருவதற்காக [illegible] ஒரு இந்திய வியாபாரிகள் [illegible] [illegible] ஒரு இலட்சம் மதிப்புள்ள [illegible]க்கல்லையும், ஒரு மரகதக் [illegible]க்கைப்பற்றி இருப்பதாகக் [illegible]கிறது. 'சீல்' வைக்கப் [illegible] சீசாக்களில், தலைவலி [illegible] அடியில் அக்கற்கள் [illegible] வைக்கப்பட்டிருந்த[illegible]

குஜராத்திலும் இந்தி மொழிக்[illegible] எதிர்ப்பு!

தாய் மொழிக்குப் போட்டியாக இந்தி போதனு மொழியாவதா?

தாய் மொழியைக் கொன்[illegible] தொங்குவது ஜனநாயக விரோதமாகும்

"பாட போதனைக்குத் தேவையான அளவுக்குப் புத்தகங்கள் இல்லை என்று கூறப்படுகிற போலி அச்சம் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது. ஆங்கிலப் புத்தகங்க[illegible]க்குப் பதிலாக இந்தி மொழிப் [illegible] புத்தகங்களையே உபயோகிக்க வே[illegible]டுமென்பதில் எவ்வித ஆட்சே[illegible]னை[illegible]யும் இல்லை. [illegible]னுல், தாய் மொழிக்கு [illegible]திராகவும், போட்டியாக[illegible] இந்தி மொழி போத[illegible] மொழி[illegible] ஆக்கப்படுமா[illegible] அது நிச்சயம் எதிர்க்கப்பட்டே ஆக வேண்டும்.

"எ[illegible] பா[illegible]றுத்தலுரை, [illegible]யிலே [illegible]ள்மேல் [illegible] தவிர்த்து [illegible]ரமொழி[illegible]மொழியையும் [illegible] எந்த [illegible]ழியாக உப[illegible]யோ[illegible] [illegible]து, ஜனநாய[illegible] [illegible]பதனை[illegible]ானதும், அதி[illegible] [illegible]க்கு [illegible]குமு."

[illegible]ாயமான[illegible]ாத் பிரதேசக் [illegible]வ்வாறு, [illegible]ளர் தக்கூர்பாய் [illegible] கூறி[illegible]ருக்கிருர் [illegible]சாய்

கச்சா தீவு யாருக்கு?

சென்னைக்கு மத்திய சர்க்கார் தாக்கீது

தனுஷ்கோடி கரையோரத்தில் உள்ள கச்சாத் தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பது குறித்து விசாரித்தறியுமாறு கேட்டுக்கொண்டு மத்திய சர்க்கார் சென்னை சர்க்காருக்கு எழுதியுள்ளனர்.

[illegible] காடியில் கடல் [illegible] அபாயம்

விட்டுத் [illegible] முழுக்குப் [illegible] வேலை தரு[illegible] டியல் ஒ[illegible] விருப்பத்[illegible] வேதனை[illegible] முன்வருகி[illegible] மந்திரிகள்[illegible] இவர்க[illegible] யில் நியா[illegible] யும, சமத்[illegible] மக்களை [illegible] தாரத்திக்[illegible] என்பதை[illegible] வோம்,

[illegible] குப் [illegible]க்கையை [illegible] சர்க்கார் பரிசீலிக்கிறது

[illegible]வில்லி, மார்ச் 28— [illegible] தனுஷ்கோடி [illegible]

[illegible]தொழில் வளங்குன்றிய பகுதிகளின் உரிமைக் கோரிக்கைகள்

'மத்திய ஆட்சியினர் மதிக்காவிடில் மாபெரும் தீங்குகள் ஏற்படக்கூடும்'

'வளர்ச்சியுள்ள பகுதியை வளங்கொழிக்கச் செய்வதும் வளமற்றப் பகுதியை அலட்சியப்படுத்தி ஒதுக்குவதும் நேர்மைக்கு முரணுகும்'

இந்திய அரசாங்கத்தின் 'ஓரவஞ்சனை' விளக்கம்

"இரண்டாவது ஐந்தண்டுத் திட்டத்தின்கீழ் சென்னை மாகாணத்தின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதாயில்லையென் கூறும் தீர்மானமொன்று சென்னை மேல்சபையில் நிறைவேறியுள்ளது. இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் சென்னைக்கு உரிய இடம் அளிக்கப்பட வேண்டுமென்று சபை வற்புறுத்தியுள்ளது.

"சென்னை மாகாணத்தின் தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் மத்திய ஆட்சியாளர் போதிய அளவு அக்கறை காட்டவில்லையென்று உறுப்பினர்கள் கண்டனக் குரல் எழுப்பியுள்ளார்கள். சென்னை மாகாண வளர்ச்சிக்கு இந்திய அரசாங்கம் மேலும் அதிக அளவு தொகையை ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்புவதில் பல்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்ட உறுப்பினர்களும் கட்சிப் பாகுபாடுகளைப் புறக்கணித்துவிட்டு ஒன்றுபட்ட முறையில் இணைந்து நின்றிருக்கி[illegible]

"'இரண்டாவது [illegible] திட்டத்தின் கீழ் சென்னைக்குக் கிடைத்துள்ள [illegible] சென்னை அரசாங்கமே ஏமாற்றமடைந்திருக்[illegible]ன்று, மேல்சபையில் விவசாய அமைச்சர் திரு. எம். பக்[illegible] கூறியிருக்கிருர்; சென்னையின் தேவைகளை [illegible] ஆட்சியாளரிடம் பன்முறை சென்னை அரசாங்[illegible] வற்புறுத்தியிருக்கிறது; எனினும், [illegible] ஏமாற்றமே' என்று [illegible] அமைச்சர் பேசியிருப்பது நன்கு கவனத்திற்குரியது.

"எனவே, மத்[illegible] போக்கைக் கண்டு சென்னை அரசா[illegible]தும், நமது மாகாண [illegible] அடைந்துள்ளன [illegible]

"தென்னாட்[illegible]ருக்கு அக்கறையே [illegible]க்கிடையே சில காலமாக [illegible]

[illegible] சென்னைக்கு உரிய இடம் அளிக்கப்[illegible] மேல்(சட்)சபை[illegible] [illegible] காட்டிவிட்டு, [illegible] தம்[illegible]யில், 'இந்தியாவின் வளர்[illegible]ற' என்ற [illegible]த்தில் மேலும் 26—3—56 'தமிழ் [illegible] தனது [illegible] குறிப்பிட்டிருப்பதாவது:

"தொழில் முன்னே[illegible] பகுதியை மேலும் செல்வங் கொழிக்கச் செய்[illegible] தொழில் வளமற்ற பகுதியை அலட்சியப்படுத்[illegible] நல்லசுக்கு ஏற்புடைத்தல்ல என்பதுடன் நேர்மைக்கும், அரசியல் நெறிக்கும் முரண்பட்டதுமாகும் [illegible] விரும்புகிறோம்.

"ஒரு நாட்டில் மக்கள் [illegible] நின்று நற்பலன் விளைவிக்க வேண்டுமானுல், அ[illegible] அரசாங்கம் அதிகாரங்களைப் பரவலான [illegible] மென்பது அரசியல் அறிஞர்கள் [illegible] கொள்ளும் கொள்கையாகும்.

"அதுபோன்றே ஒரு [illegible] நிற்கவும், மக்களிடையே நல்[illegible] நல்[illegible] தொழிற்சாலைகளும் [illegible] முறையில் அமைக்கப்பட வேண்டியது [illegible] புறுத்த விரும்புகிறோம்.

"தொழில் வள[illegible] உரிமைக் [illegible] கைக்கு மத்திய ஆட்சியின[illegible] செவிசாய்[illegible] போக்கை மாற்றிக்கொள்[illegible], இந்திய ஒற்றுமைக்கே ஊறுவிளைவிக்கத் தக்க தீங்குகள் பிறக்காதிருக்க [illegible] மென்று எச்சரிக்கிறோம்.

இவ்வாறு கருத்தறிவித்துவிட்[illegible] மேலும் அத்தலையங்கத்தில் [illegible] தொழில் வளர்ச்சித் திட்[illegible] திற்கு இரண்டாவது [illegible] தாண்டுத் திட்டத்தில் [illegible] ணக்கும் பம்பாய்க்கும் ஒதுக்கப்பட்ட[illegible] ள்ள தொகையின் வேறுபாட்[illegible] விளக்கிக் காட்டியுள்ளது:

"இந்தியாவில் பல்வேறு மாகாணங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்காக மட்டும் [illegible] சுமார் ரூ. 2,214 கோடிகளை [illegible] நிர்ணயிக்கப்பட்டி[illegible] [illegible] இத்தொகைக்கு சென்னைக்குக் கிடைக்கக்கூடிய [illegible] ரூ. 170·3 கோடிகளை [illegible] செய்யப்பட்[illegible] [illegible] வளர்ச்[illegible] அரசாங் [illegible] அனுப்பி வைத்[illegible] [illegible]டங்களுக்கு [illegible]யின் மதிப்பு [illegible] கோடிகள் [illegible]ப்பட்டிருந் [illegible] அரசாங்

"இரண்டாவது ஐந்தாண்டுத் [illegible] வளர்ச்சிக்கென சுமார் [illegible] 4,800 கோடித் தொகை [illegible] முதலீடு செய்ய உத்தேசிக்[illegible] பட்டுள்ளது. [illegible] 229 கோடிகள் [illegible]

[illegible]மோர் சென்னை கோரிய தொகையில் ரூ. 59 கோடியளவுக்குக் குறைத்துவிட்டது.

"இந்தியாவில் தொழில் துறை முன்னேற்றத்தில் பின் தங்கியுள்ள மாகாணங்களில் சென்னையும் ஒன்றென்பதை நாம் குறிப்பிடத் தேவையில்லை.

"இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் தொழில் நிலை பற்றிய புள்ளி விவரங்கள் இந்த உண்மையைத் தெளிவாகக் காட்டுகின்றன. எனவே, இந்தியாவின் தொழில் வளர்ச்சியையே முதல் நோக்கமாகக் கொண்ட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை போன்ற பிற்பட்ட மாகாணங்களுக்கு முன்னணிப் பங்கும், தனிச் சலுகையும் காட்டப்பட்டிருக்க வேண்டியதே நியாயமாகும்.

"ஆனுல், மத்திய ஆட்சியினரோ வேறுவிதமாக நடந்துக் கொண்டிருக்கிருர்கள். பல்வேறு வகையான தொழில் வளங்கள் நிறைந்துள்ள பம்பாய் மாகாணத்திற்கு ரூ. 264·4 கோடித் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது; ஆனுல், தொழில் வளங்குன்றியுள்ள சென்னைக்கோ ரூ. 170·3 கோடிகளே கிடைத்துள்ளன.

இரு மாகாணங்களின் தொழில் துறை நிலைகளைக் கவனிக்குமிடத்து மத்திய அரசினர் செய்துள்ள முடிவு எவ்வளவு அலட்சியமானது என்பதுடன், எத்தகைய அநீதி மிக்கது என்பதும் புலனுகும்.

"பம்பாய் மாகாணம் சுமார் 3·84 கோடி மக்களைக் கொண்டது; சென்னை மாகாணம் 3·59 கோடி மக்களைக் கொண்டது.

"பம்பாய் மாகாணம் பல்வேறு வகையான தொழிற்சாலைகள் நிறைந்ததொன்று; பஞ்சாலைத் தொழிலில் இந்தியாவிலே பெயர்பெற்ற மாகாணமும், [illegible] நெருங்கமுடியாத அளவுக்கு இம்மாகாணம் உயர் நிலையை அடைந்திருக்கிறது.

"1950-ம் ஆண்டின் பொருளாதாரப் புள்ளி விவரங்களின் படி, இந்தியாவிலுள்ள மொத்தப் பஞ்சாலைகளின் எண்ணிக்கை 517 ஆகும்; இவற்றில் பம்பாய் மாகாணத்தில் மட்டும் 339 ஆலைகள் அமைந்துள்ளன; ஆனுல் சென்னை மாகாணத்திலோ (1952-ம் ஆண்டின் இறுதியில் சேகரித்த விவரங்களின்படி) மொத்தம் 36 அமைந்துள்ளன.

"அடுத்து இந்தியாவிலுள்ள சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 291; பம்பாயில் மட்டும் 272; சென்னையிலோ நான்கே நான்கு ஆலைகள்!

"இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த (பஞ்சுத்) துணியின் மதிப்பு ரூ. 303·82 கோடிகளாகும்; பம்பாயில் மட்டும் சுமார் ரூ. 203·8 கோடி (ஆலைகளின் அப்போதைய விலைப்படி) ஆகும்.

"இந்தியாவில் உற்பத்தியாகும் சர்க்கரையின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 4·71 கோடி[illegible]; பம்பாயில் மட்டும் ரூ. 4 கோடி மதிப்புள்ள சர்க்கரை உற்பத்தியாகிறது; சென்னையின் உற்பத்தியளவோ குறிப்பிடத் தகுதியுடையதல்ல.

"சென்னையில் பஞ்சாலைத் தொழிலும், சர்க்கரைத் தொழிலும் நீங்க, சிமெண்டு, புகையிலை, தீப்பெட்டி உற்பத்தி, எண்ணெய் உற்பத்தி ஆகிய சில தொழில்களே ஓரளவு குறிப்பிடத்தக்கன. இவற்றிலும் பம்பாயுடன் ஒப்பிடுகையில் சென்னையின் நிலை மன நிறைவு அளிப்பதாகக் கருத முடியாது.

"பம்பாயில் சுமார் 272 தாவர எண்ணெய் உற்பத்தி ஆலைகள் உள்ளன; ஆனுல் சென்னையில் சில ஆலைகளே உள்ளன.

"அதுமட்டுமின்றி சென்னை மாகாணத்தில் காணப்படாத பல்வேறு வகையான தொழிற்சாலைகள் பம்பாயில் நிறைந்துகிடக்கின்றன.

"இராசயனப் பொருட்களின் உற்பத்தியிலும் அலுமினியம், செம்பு, பித்தளை உற்பத்தியிலும் பம்பாய் இணையற்ற இடம் பெற்றிருக்கிறது; இரசாயனத் தொழிற்சாலைகள் 93-ம், பிரதிய ரகச் சரக்கு உற்பத்தி ஆலைகள் 97-ம் அமைந்துள்ளன; இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் 12 உள்ளன; எஞ்சினீயரிங் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் 554 இருக்கின்றன.

"இத்துடன், சோப்பு, கண்ணுடி, காகிதம், கம்பளத்துணி ஆகியவை உற்பத்தி செய்யும் ஆலைகள் பல பம்பாயில் நிறைந்துள்ளன.

"பம்பாய் மாகாண மக்கள் தொகைக்கும், சென்னை மாகாண மக்கள் தொகைக்குமிடையே அவ்வளவு பெரிய வேறுபாடு இருப்பதாகக் கூற முடியாது; எனினும் தொழில் துறையில் இது மாகாணங்களுக்கு மிடையே இருந்துவரும் நிலை, 'மலைக்கும், மடுவுக்குமிடையே' காணப்படும் வேறுபாடுபோன்று காட்சியளிக்கிறது.

"அப்படியிருக்க தொழில் வளம் மிக்க மாகாணத்தின் 'தொழில் வளர்ச்சிக்கு' ரூ. 264·4 கோடிகள்! தொழில் வளமேயில்லாத சென்னைக்கு ரூ. 170·3 கோடிகள்!!

"மத்திய அரசாங்கம் பல்வேறு மாகாணங்களுக்கும் எத்தகைய நீதி வழங்குகிறதென்பதையே இந்நிலை எடுத்துக் காட்டுகிறது."

செய்திச் சுருள்

கோவை—29-வது வட்ட அழகிரி நினைவு படிப்பகம்

25—3—56 காலை 10 மணியளவில், படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் மு. இராமநாதன் செயலாளராகவும், இ. க. சண்முகம் துணைச்செயலாளராகவும், க. அங்குதாசு பொருளாளராகவும் செயற்குழு உறுப்பினர்களாக 12 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுரை பகுத்தறிவுப் படிப்பகம்

25—3—56ல், தோழர் ஆர். எஸ். நடராசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பக உறுப்பினர் கூட்டத்தில், மார்ச் மாத வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சென்னை—8-வது வட்ட மக்கள் மன்றம்

25—3—56ல் நடைபெற்ற மேற்படி மன்றத்தின் பொதுக்குழுவில், ஆண்டு அறிக்கையும், வரவு—செலவு கணக்குகளும் வாசிக்கப்பட்டதுடன் தோழர் சி. எஸ். கணேசன் அவர்களைத் தலைவராகக் கொண்டு நிர்வாகக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

திருக்குறள் வகுப்பும், பொதுக்கூட்டமும்

27—3—56ல், சென்னை முத்துக்கிருஷ்ணன் தெரு, 15-ஆம் எண்ணுள்ள இல்லத்தில் சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை தாய்மார் கழகத்தின் சார்பில் திருக்குறள் வகுப்பும், பொதுக்கூட்டமும், மயிலை-சிவமுத்து தலைமையில் நடைபெற்றபோது, அமைச்சர் மாணிக்கவேலனுர் திருமகனுர் இயற்கை எய்தியமை குறித்து இரங்கி, அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

குருவிக்கரம்பையில் சர்வகட்சிப் பொதுக்கூட்டம்

17—3—56 மாலை 5-30 மணியளவில் குருவிக்கரம்பை விவேகானந்தா சங்க கட்டிடத்திற்கு எதிரில் சர்வகட்சிப் பொதுக்கூட்டம் தோழர் வீ. வெள்ளச்சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வானம்பாடி, கே. முத்தையா ஆகியோர் பிப். 20 அர்த்தால் பற்றியும், அரசினர் போக்குக் குறித்தும் விளக்கவுரையாற்றினர். பின்னர் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சென்னை—குயப்பேட்டை திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றம்

25—3—56 மாலை 6 மணியளவில் தோழர் ந. கோவிந்தன் தலைமையில், மேற்படி மன்ற மூன்றும் ஆண்டு நிறைவு விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ந. கிருட்டிணன், லோ. இளமாறன் ஆகியோர் பேசினர். தோழர் தாமரைச் செல்வன் ஆண்டு அறிக்கை வாசித்தார். செயலாளர் க. வரதன் நன்றி கூறினுர்.

24—3—56 மாலை 6 மணியளவில், மன்ற மனையில் கூடிய பொதுஉறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் க. வரதன், தாமரைச் செல்வன், ந. கிருட்டிணன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், 10 பேர் கொண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது

நன்றி அறிவிப்பு

"12—3—56ல், திருப்பரங்குன்றத்தில், அண்ணு அவர்கள் தலைமையில் நடைபெற்ற எனது திருமண விழாவிற்கு, நேரில் வந்திருந்து சிறப்பித்த நண்பர்கட்கும், வாழ்த்துக்கடிதங்களும், தந்தியும் அனுப்பிய நண்பர்கட்கும் எனது மனமுவந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்,"

என்று, எம். ஜி. ஆர். நாடகமன்றத் தோழர் ஆர். எம். வீரப்பன் தெரிவித்துக் கொள்ளுகிருர்.

இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட ரூ. 11-ம் வரப் பெற்ருேம் — நன்றி — பொறுப்பாளர்.

விலகினர்

மானூர் இளைஞர் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களான தோழர்கள் மா. கருப்பணன், எஸ். கருப்புச்சாமி, இரா. முத்துச்சாமி, ஆகியோர் அதிலிருந்து விலகி, மானூர்—மத்திய தி. மு. கழக உறுப்பினர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டார்கள்.

மறைவு

கோபிசுர செயற்குழு உறுப்பினரும், மாவட்டப் பிரதிநிதியுமான தோழர் ப. உ. சந்தான அவர்களின் தாயார் 25—3—56ல் இயற்கை எய்தினுர் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேம். நமது அனு[illegible]பம் உரித்தாகுக.

தொழில் துறையில் திராவிடம் பன்மடங்கு பின்தங்கிக் கிடக்கிறதே!

தொழில் திறமை இல்லையா? சிலோன்-சிங்கப்பூர் உயர்ந்திருப்பதைப் பார்!

மூலப் பொருட்கள் ஏராளமாகக் கிடக்கின்றனவே—ஏன் இந்த புறக்கணிப்பு? எதற்கு இந்த அலட்சியம்?

தொழில் திறமோ ஏராளம்-மூலப்பொருட்களோ மிகுதி!

தொழிலதிபர் கூறும் கணக்கும்-கருத்தும்

சென்னை, மார்ச் 31—

"தொழில் துறையைப் பொறுத்தவரையில் தென் இந்தியா அதிகமதிகமாகப் புறக்கணிக்கப்பட்டே வருகிறது. இதற்குக் காரணம் எதுவாக இருந்தாலும், பம்பாய், வங்கம் போன்ற பிற மாநிலங்களுடன் இம்மாநிலங்களை ஒப்பிடும் போது, தொழில் துறை வேலைகளில் மிக அதிக தூரத்திற்கு பின்தங்கிக் கிடக்கிற நிலை புலனாகிறது. இந்நிலை ஏற்படுவதற்குக் காரணம், இப்பகுதிகளில் தேவையான அளவுக்கு உலோகக் கனிப் பொருள்கள் கிடைக்கவில்லை என்பது தான் என்று கூறப்படுகிறது. ஆனால், இதை ஒரு சரியான காரணமாகப் பொருட்படுத்த முடியாது.

"பொதுவாகக் கூறினால், தென்னிந்திய மக்கள் உடல் நலம் கொண்டவர்களும், கூர்மையான அறிவும், சாந்தமான பழக்க வழக்கங்களும் கொண்டவர்கள். பொறிகளுடன் இணைந்து அவர்கள் செய்கின்ற வேலை நிச்சயம் அவர்களுடைய சராசரி திறமையையும் விட அதிகமானதேயாகும். இது காலாகாலத்தில், மற்ற இந்திய மக்களாலும், பிற நாட்டவராலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

"கடந்த 50 ஆண்டுக் காலத்திற்கிடையில், ஆப்பிரிக்கா, மலாயா, பர்மா, இலங்கை போன்ற பிற நாடுகளுக்குப் பிழைப்புத் தேடி அனேகம் பேர் தென்னிந்தியர் சென்றிருக்கின்றனர். அப்படிச் சென்ற அவர்களெல்லாம், எங்கெங்கு சென்றார்களோ அங்கெல்லாம் தங்களை நிலைப்படுத்திக் கொண்டதுமட்டுமல்லாமல், அந்தந்தப் பகுதிகளின் அபிவிருத்திக்காக வேண்டி, அதிக அளவில் தங்கள் உழைப்பைத் தந்திருக்கிறார்கள்.

"தெலிங்கானாவில் நிலக்கரியும், சென்னையில் பழுப்பு நிலக்கரியும் கிடைக்கிறது. பழுப்பு நிலக்கரியை அதிகமாகத் தோண்டியெடுப்பதற்கென தீவிரமான ஆராய்ச்சிகள் நடைபெற்றவண்ணமுள்ளன. பல நூற்றுக்கணக்கான சதுரமைல் பரப்பளவுப் பகுதிகளில் காணப்படும் பழுப்பு நிலக்கரிப் படிவங்களும், அவற்றின் தரமும் நல்ல வகையைச் சேர்ந்தது என்று கூறப்படுகிறது. பழுப்பு நிலக்கரியைப் பெறுமுன்னர் ஒரு பெரிய தண்ணீர் பரப்பையும் அங்கிருந்து வெளியேற்றியாகவேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக இப்போது, தண்ணீரை அகற்றுவதற்குப் பெரும் அளவில் தண்ணீர் இறைக்கும் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன. அப்படி தண்ணீரை வெளியேற்ற நடைபெறும் வேலைகள் வெற்றி பெற்று பழுப்பு நிலக்கரியும் தோண்டியெடுக்கப்பட்டுவிட்டால், இங்குள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துவிடுவதுமட்டுமல்லாமல், இந்த மாவட்டத்தின் நிலப்படமே முற்றிலுமாக மாறிவிடக்கூடிய நல்ல சூழ்நிலைகள் உருவாகும்.

"சேலத்திலும் ஆல்வாயிலும் 'பாக்சைட்' படிவங்கள் பரந்து காணப்படுகின்றன. ஆல்வாயில் மட்டும் இப்போது இந்தப் படிவங்களைக்கொண்டு அலுமினிய உலோகத் தயாரிப்பில் ஒரு தொழிற்சாலை ஈடுபட்டிருக்கிறது. 'பாக்சைட்டை' முக்கியமான கூட்டுப் பொருளாகக் கொண்ட அலுமினியம் நாளுக்கு நாள், உலக முழுமையிலும் பல தொழில்களில் உபயோகிக்கப்பட்டு வருகிற முக்கிய உலோகப் பொருள்களில் ஒன்றாக மாறிக்கொண்டே வருகிறது.

—இவ்வாறு, இன்று சென்னையில் நடைபெற்ற இந்திய 'சார்ட்டர்ட் அக்கௌண்டண்டு'கள் கழகத்தின் சென்னை வட்டாரக் குழுவின் முதல் வட்டார மாநாட்டில் 'தென்னாட்டின் தொழில்துறை சக்தி' என்ற தலைப்பில் பேசுகையில் எஸ். அனந்தராம கிருஷ்ணன் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசினதாவது:—

"இரண்டாவது திட்டக் காலத்தில் நாடு முழுமையிலும் ஆண்டொன்றுக்கு அலுமினியத் தேவை 80,000 டன்கள் என மதிப்பிடப்பட்டது. ஆனால் இப்போதுள்ள நமது மொத்த உற்பத்தியே ஆண்டொன்றுக்கு 10,000 டன்னுக்குக் குறைவுதான்.

"புதிதாகத் துவக்கப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளுக்கும், இனிமேல் நிறுவப்பட இருக்கிற தொழிற்சாலைகளுக்கும் தேவையான ஆயிரக்கணக்கான பல்வேறு வகைப்பட்ட அலுமினியக் கனிப்பொருள் வார்ப்படங்களைத் தயாரித்துத் தர, இந்த பகுதியில் அலுமினியக் கனிப்பொருள் தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும்.

"சில ஆண்டுகளுக்கு முன்னர், நெல்லூர் மாவட்டத்தில் செம்புத் தாதுப் பொருட்களைக் கண்டுபிடிக்க வேண்டி ஒரு ஜெர்மன் நிபுணர் குழு சர்வே நடத்திற்று. அதற்கென லைசென்சுகூட அவர்களுக்கு வழங்கப் பெற்றது. ஆனால் நிதிக் கஷ்டத்தின் காரணமாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட முடியாமலாகிவிட்டது. இந்த உலோகப்பொருளுடைய வர்த்தக முக்கியத்துவத்தைக் கருதி, அப்பகுதிகளிலுள்ள செம்புத் தாதுக்களைத் தோண்டியெடுக்க உடனடியாக ஆராய்ச்சிகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்."

மேலும் அவர் பேசுகையில் ஆந்திர—தெலிங்கானா பகுதிகள், மற்றும் நீலகிரி மாவட்டப் பகுதிகள், சென்னை மாநிலத்தில் சிற்சில இடங்கள் ஆகியவற்றில் தங்கச் சுரங்க வேலைகள் வெற்றிகரமாக நடைபெற முடியும் என்றும், சேலம், விசாகப்பட்டினம், மைசூரின் பல பகுதிகளில் நல்லதரமான 'மாங்கனீஸ்' கிடைக்கிறது என்றும், தற்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு மாங்கனீஸ்' சுரங்கம் மூலம் தோண்டியெடுக்கப்பட்டு வருகிறதென்றும் குறிப்பிட்டார்.

"நம்முடைய மங்கனீசத் தாதுப்பொருட்களை அமெரிக்கா ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளும் வாங்குகின்றன; அந்த மாங்கனீசத் தாதுக்கள் உண்மையிலேயே மிக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவைகள் என அந்நாடுகள் கூறுகின்றன. எனவே, இந்தியாவில், மாங்கனீசத் தாதுப்பொருள் தோண்டியெடுக்கும் வேலை வெற்றியளிக்கும்; ஒரு முறையான அடிப்படையின்கீழ் இந்த வேலையைத் துவங்குவதாக இருந்தால் பெருமளவு வீண் விரயங்கள் அனைத்தும் தடுக்கப்பட முடியும்."

(பேச்சு முடியவில்லை நாளை வெளிவரும்.)

சென்னை, ஏப். 1—

புதுவை சட்டசபை காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரான எட்வர்ட் குபேர் வருகிற 20-ந் தேதியன்று நடைபெற இருக்கிற தேர்தலின்போது கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

சட்டசபையில் இராசன் முழக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்ற எந்தக் காரியங்களுக்காகவும் அர்த்தால் கூடாது எ காங்கிரஸ் கட்சி கூறுவது நியாயமாகாது. அப்படியா எந்த ஒரு பிரச்சினைக்குமே அர்த்தால் கூடாது என்று கட்சியினரிடம்கூறி ஒரு ஒப்பந்தத்திற்கு முன்வரட்டும். இ நடைபெற்ற அர்த்தால், ஜனநாயகத் தத்துவம் ஒன் வற்புறுத்துவதற்கென நடைபெற்ற ஒன்றாகும். ஜனநாயக்க பிரதமர் நேருவுக்கு மதிப்பு இ[illegible]மானால், தகராறுகளு இடந்தருகின்ற எல்லைப் பகுதி[illegible] குறித்து ஒரு முடிவு வரட்டும்,"

—இவ்வாறு, நீதிக்கட்சித் தலைவர் [illegible] இராசன் அவர்கள், சென் சட்டசபையில் மாநிலப் புனரமைப்பு மசோதாமீது, நிதி மந்தி பிரரேபித்த தீர்மானத்தின்மீது பேசுகையில்குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில், சட்டசபையில் மாநிலக் குழு சிபாரிசுகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்தில் தட்சிணப் பிரதேச யோசனையை ஆதரித்துப் பேசிய அமைச்சர் சுப்பிரமணியம், இப்போது அது குறித்து வாய் திறவாமல் இருப்பது குறித்துத் தாம் ஆச்சரியமுறுவதாகவும் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"பலவகைப்பட்ட மக்களையும் ஒன்று சேர்ப்பதாக மண்டல மன்ற அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்; என்றாலும், அந்த அமைப்பு சட்ட மன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியதாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, சர்க்கார் உறுப்பினர்களாக இருக்கக் கூடாது. அப்படி அமைகிற மன்றம், துவக்கத்தில் வெறும் ஆலோசனைக் குழுவாகவே வேலை செய்து, பின்னர், அதனுடைய அனுபவத்தைப் பொறுத்து நிர்வாகப் பங்கு பெறும் அமைப்பாக மாறலாம்"

இவ்வாறு அவர் கூறுகையில் அமைச்சர் சுப்பிரமணியம் எழுந்து 'கூட்டு முன்னணி'த் தலைவரான அவ கூறினவைகளையெல்லாம் அம்முன்னணியின் சம்பந்தப்பட்ட மற்ற கட்சிகள் அனைத்தாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

[illegible] திரு. ராசன் அவர்கள், தரிம் தம்முடைய தனிப்பட்ட முறையிலேயே இவற்றைக் கூறுவதாகவும், கூட்டு முன்னணித் தலைவர் என்ற முறையில் அல்ல என்றும் குறிப்பிட்டுவிட்டு மேலும் தொடர்ந்து பேசியதாவது:—

"சட்ட மன்ற பிரதிநிதிகளை உறுப்பினராகக் கொண்டிராத மண்டல மன்றங்களை சட்டசபை வரவேற்கக்கூடாது. மேலும் தமிழ் மாநிலம் தேவை[illegible]னக் கேட்டபோது, அந்த [illegible]ரிக்கையில் விசேடப் பு[illegible] தத்துவம் அடங்கியிரு[illegible]தை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். அதை விடுத்து சென்னை மாநிலத்தை 'தமிழ் நாடு' என்று அழைப்பதில் [illegible]வர்களுக்கு என்ன ஆட்சேபணை என்பது பற்றி [illegible]னக்கு ஒன்றும் புரியவில்லை.

"தேவிகுளம் — [illegible] பகுதிகளைப் பொறுத்தவரையில் தமிழர்களது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுவிட்டது—புறக்கணிக்கப்பட்டுவிட்டது. ஆந்திரா—சென்னை மாநில எல்லைத் தகராறுகளைத் தீர்க்க சேர்மையான முறைகளைக் கையாண்டிருந்தால், சமரசமான முடிவு ஏற்பட்டிருக்கக் கூடும்.

"தேவஸ்வம் நிதிப் பாகுபாடுகளைப் பொறுத்தவரையில், மாநில சர்க்கார், திரு-கொச்சி மாநிலத்திலிருந்து இந்த [illegible]ருக்கிறதிற்கு மாறறப்பட[illegible] கோயில் [illegible] சொத்துக்களுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டும். இந்நிதிப் பிரிவினை, அந்த பகுதிகளிலுள்ள மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டிராமல், இந்தக் கோயில்களிலிருந்து திரு—கொச்சி மாநில சர்க்கார் எடுத்துக்கொண்ட சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும்."

ஆந்திர - தெலிங்கானா இணைப்பு எதிரொலி!

ஐதராபாத், ஏப். 2—

ஆந்திர—தெலிங்கானா மாநிலங்களின் இணைப்பு குறித்துக் கிளம்பு என்ற பொதுப்படையான சிற்சில பிரச்சினைகள் குறித்து விவாதிக்க அவ்விரண்டு மாநிலத் தலைவர்களும், நாளைக்கும் மறுநாளுமாக இரண்டு தினங்கள் கர்நூலில் கூட இருக்கிறார்கள்.

ஆந்திர—தெலிங்கானா மாநிலப் பெயர் மாற்றம் அவர்களது பேச்சுக்களில் முக்கிய இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், அந்த இரண்டு மாநிலத் தலைவர்களுக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டு, மாநிலத்தின் பெயர் மாற்றப்பட வேண்டுமென்றால் அதில் தங்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது என்று மத்திய சர்க்காரும் அறிவித்துவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

'ஆந்திரப் பிரதேசம் எனப் பெயர் மாற்றியமைக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்களும், ஆனால், அதை ஒத்துக்கொள்ள விரும்பாமல் 'தெலுங்குப் பிரதேசம்' என்ற பெயரே தேவை என்று தெலிங்கானா மாநிலத் தலைவர்களும் கோருவதாகத் தெரிகிறது.

இந்தியப் பேரரசிடம் மிதமிஞ்சிய....

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"எல்லைக்குழு நியமிக்கப்பட்டாக வேண்டும். அதாவது, பிற ராஜ்யங்களில் உள்ள கன்னட மொழியினர், மைசூர் ராஜ்யத்துடன் இணைந்துகொள்ள வேண்டும் என விழைகின்றனர். அவர்களுடைய விருப்பத்திற்குப் பரிகாரம் தேடும் வகையில், மசோதாவில் கூறப்படும் எல்லைக்குழு வரவேற்கத்தக்கதாகும்."

மேலும் இதுபற்றியே குறிப்பிடும்பொழுது, முதலமைச்சர், பிற ராஜ்யங்களிலிருந்து தன்னுடன் சேரக்கோரும் கன்னட மொழியினர் கோரிக்கையில் மைசூர் நடந்துகொள்ளவேண்டிய முறை பற்றியும் பின்வருமாறு விளக்கிக் கூறினார்:—

"கேரளா, சென்னை, ஆந்திரா முதலிய ராஜ்யங்களில் உள்ள மக்கள் மைசூருடன் சேர விரும்புகிறார்கள். கூர்க்—தென் கன்னடம் ஆகிய இடங்களில் இருந்துவரும் கன்னடிய மக்களைப்போன்றே அவர்களும் இந்தியர்களேயாவர். ஆகையால், அவர்களை நாம் வரவேற்காமலிருப்பது, நம்முடைய குறுகிய புத்தியாகத்தான் இருக்க முடியும். இவ்வகையில், நாம் நம்முடைய நெஞ்சையும், நுழைவு வாயிலையும் திறந்துவைக்கவேண்டும்."

மைசூர் முதலமைச்சர் பெல்லாரி குறித்து மசோதாவில் உள்ள தீர்ப்பை எடுத்துக்காட்டி கூறியிருப்பதாவது:—

"பெல்லாரி மாவட்டத்திலுள்ள நான்கு தாலுகாக்கள்பற்றி விவாதம் பலமாக இருந்துவருகிறது. அந்த நான்கு தாலுகாக்களும் மைசூரிலேயே இருக்க வேண்டும் என்பது மைசூர் மக்களின் கருத்தாகும். அதை ஒப்புக்கொண்டு அந்த நான்கு தாலுகாக்களும் மைசூரிலேயே இருக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் நீதியாக, மசோதாவில் ஏற்பாடு செய்திருக்கிறது."

"நடைமுறை, அறநெறி ஆகிய நினைப்பில்தான் பெல்லாரி மைசூரில் இருக்க வேண்டுமென்று அரசாங்கமும், மக்களும் விரும்புகிறார்களே அல்லாது, எந்தவிதமானப் பிரதேச ஆக்கிரமிப்பு விருப்பத்தின்கீழல்ல."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.